செ.வெ.எண்: 18 நாள்: 11.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிடவும், குடிநீர் பற்றாக்குறை போக்கிட மாவட்ட நிர்வாகம் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் செய்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக 48 ஊராட்சிகளில் 24 குழுக்கள் அமைக்கப்பட்டு, வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள் போன்ற அலுவலர்களைக் கொண்டு 7 முதல் 10 ஊராட்சிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தினசரி நேரடி குடிநீர் சம்மந்தமான புகார்கள் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கிராமங்கள்தோறும் பொதுமக்கள் அறியும் வண்ணம் எவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படவேண்டும், குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துவது மற்றும் ஊராட்சிகள் அனுமதியின்றி முறைகேடாக மின்மோட்டார்களை கொண்டு குடிநீர் உறிஞ்சப்படுவதை தடுத்திடும் பொருட்டும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்று (11.03.2017) ஜெயங்கொண்டம் ஒன்றியம், உட்கோட்டை ஊராட்சியில், குமரன் நகரில் ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளடக்கிய அலுவலக உறுப்பினர்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதுபோன்று மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

இதனைத்தொடர்ந்து, குடிநீர் சம்மந்தமான அமைக்கப்பட்ட அலுவலர்கள் குழு கண்காணிப்பில் இன்று (11.03.2017) அரியலூர் ஒன்றியம், அஸ்தினாபுரம் ஊராட்சியில் 2 மின்மோட்டார்களும், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபுரந்தான் ஊராட்சியில் 1 மின்மோட்டாரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற தொடர் நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுவருகிறது.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.